| Roll No. | | | | | | | | | | | | Serial No. of Q. C. A. B. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 56 ] [ ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 24

Total No. of Questions : 56 ] [ Total No. of Printed Pages : 24

ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : **85-T** **ವಿಷಯ : ಸಮಾಜ ವಿಜ್ಞಾನ**

**Code No. : 85-T** **Subject : SOCIAL SCIENCE**

( ತಮಿಳು ಭಾಷಾಂತರ )

( Tamil Version )

ದಿನಾಂಕ : 22. 06. 2012 ] [ Date : 22. 06. 2012

ಸಮಯ : ಬೆಳಿಗ್ಗೆ 09-30 ರಿಂದ ಮಧ್ಯಾಹ್ನ 12-45 ರವರೆಗೆ ] [ Time : 09-30 A.M. to 12-45 P.M.

ಪರಮಾವಧಿ ಅಂಕಗಳು : 100 ] [ Max. Marks : 100

**FOR OFFICE USE ONLY**

| Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | | 14. | | 27. | | 40. | | 53. | |
| 2. | | 15. | | 28. | | 41. | | 54. | |
| 3. | | 16. | | 29. | | 42. | | 55. | |
| 4. | | 17. | | 30. | | 43. | | 56. | |
| 5. | | 18. | | 31. | | 44. | | × | |
| 6. | | 19. | | 32. | | 45. | | × | |
| 7. | | 20. | | 33. | | 46. | | × | |
| 8. | | 21. | | 34. | | 47. | | × | |
| 9. | | 22. | | 35. | | 48. | | × | |
| 10. | | 23. | | 36. | | 49. | | × | |
| 11. | | 24. | | 37. | | 50. | | × | |
| 12. | | 25. | | 38. | | 51. | | × | |
| 13. | | 26. | | 39. | | 52. | | × | |
| | | | | | | | | ***Total Marks*** | |

| **Total Marks in words** | | | **Grand Total** | |
|---|---|---|---|---|
| 1. ✓ | | | | |
| 2. ✓ | | ✓ | ✓ | |
| *Signature of Evaluators* | *Registration No.* | *Signature of the Deputy Chief* | *Signature of the Room Invigilator* | |

*பொதுவான குறிப்புகள் :*

i) இந்த வினா விடைத்தாள் தொகுப்பில் பல்வகை விடை-வினா வகை ( Objective type ) வினாக்கள் மற்றும் விடைகளை எழுதும் வகை ( Subjective type ) வினாக்கள் என மொத்தம் 56 வினாக்கள் உள்ளன.

ii) பல்வகை விடை-வினா வகை வினாக்களுக்கு ( Objective type questions ) விடை எழுதுவதற்கான இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த இடத்தில் நீங்கள் சரியான விடை என தேர்வு செய்த விடையை அவ்விடைக் குறியீட்டுடன் முழுவதுமாக எழுத வேண்டும்.

iii) விடைகளை எழுதும் வகை வினாக்களுக்கு ( Subjective type questions ) ஒவ்வொரு வினாவிற்கும் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. நீங்கள் ஒதுக்கப்பட்டுள்ள இடத்திற்குள்ளாகவே விடையளிக்க வேண்டும்.

iv) பல்வகை விடை வினாவகை ( Objective type ) மற்றும் எழுதும் வகை வினாக்களுக் ( Subjective type ) கென வழங்கப்பட்டுள்ள குறிப்புகளை கவனமாக கடைப்பிடிக்கவும்.

v) மாணாக்கர்கள் விடைகளை பென்சிலில் எழுதுதல் கூடாது. ( வரைபடங்கள், படங்கள் மேப்புகளை தவிர ). இவ்விதியை மீறி பென்சிலால் எழுதப்பட்ட விடைகள் மதிப்பீடு செய்யப்படமாட்டாது.

vi) பல்வகை வினா-விடை வகை வினாக்கள், கோடிட்ட இடங்களை நிரப்புதல் மற்றும் பொருத்துக போன்ற வினாக்களில் அழித்து எழுதுதல் / சுரண்டுதல் / குறியிடுதல்கள் போன்றவை அனுமதிக்கப்பட மாட்டாது. இவ்விதியை மீறினால் விடைகள் மதிப்பீடு செய்யப்படமாட்டாது.

vii) மாணாக்கர்கள் வினாத்தாளை படிப்பதெற்கென கூடுதலாக 15 நிமிடங்கள் வழங்கப்பட்டுள்ளது.

I. கீழ்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் / முழுமை பெறாத கூற்றுகளுக்கும் ( Incomplete Statements ) நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்று மட்டுமே சரியானது அல்லது மிகப்பொருத்தமானது. சரியான விடையை தேர்ந்தெடுத்து, அதற்கென தரப்பட்டுள்ள இடத்தில் குறியீட்டு எழுத்துடன் முழு விடையையும் எழுத வேண்டும் : 15 × 1 = 15

1. யாருடைய அறிவுரையின்படி இந்தியாவில் ஆங்கிலக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது ?

(A) வில்லியம் பெண்டிங்

(B) மெக்காலே

(C) சர் சார்லஸ் உட்

(D) டல்ஹவுசி.

*விடை :* ______________________________

2. பிராந்திய சுயாட்சி ( Provincial autonomy ) எந்த சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டது ?

(A) 1858 ம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம்

(B) 1919 ம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம்

(C) 1935 ம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம்

(D) 1947 ம் ஆண்டு இந்திய சுதந்திரச் சட்டம்.

*விடை :* ____________________

3. கர்நாடகாவில் ஒத்துழையாமை இயக்கத்தில் பங்குபெற்ற பெல்லாரியைச் சேர்ந்த பிரபலமான வழக்கறிஞர் யார் ?

(A) ஜெயராவ் நரகுண்ட்

(B) கொல்லாசலம் வெங்கட்ராவ்

(C) கர்நாட் சதாசிவராவ்.

(D) ஸ்ரீநிவாசராவ் கவுஜலாகி. ( Srinivasrao Kaujalagi ).

*விடை :* ____________________

4. கர்நாடகா ஏக்கிகரனா சமிதி ( Karnataka Ekikarana Samithi ) யின் தலைவராக விளங்கியவர்

(A) இராமகிருஷ்ண கரந்த்

(B) ஆளவந்தி சிவமூர்த்தி சுவாமி

(C) S. நிஜலிங்கப்பா

(D) ஆலூர் வெங்கட்ராவ்.

*விடை :* ____________________

5. சர்வதேச சங்கம் ( League of Nations ) எந்த ஆண்டு நிறுவப்பட்டது ?

(A) கி. பி. 1916

(B) கி. பி. 1917

(C) கி. பி. 1918

(D) கி. பி. 1919.

*விடை :* ____________________

6. பாசிசக் கட்சியை நிறுவியவர் யார் ?

(A) ஹிட்லர்

(B) ஹிடன்பெர்க்

(C) முசோலினி

(D) மூன்றாம் இம்மானுவேல்.

*விடை :* ____________________

7. கிராமப்புற பெண்களின் மேம்பாட்டிற்கென அமல்படுத்தப்பட்ட திட்டம்

(A) ஸ்திரி சக்தி ( Streeshakti )

(B) சுவயம்சித்தா ( Swayamsiddha )

(C) பாலிகா சம்ருத்தி யோஜனா ( Balika Samruddhi Yojana )

(D) ராஷ்டிரிய மகிளா விமோச்சனா ( Rashtreeya Mahila Vimochana ).

*விடை :* ____________________

8. ஐ. நா. வில் குழந்தைகளின் நலத்திற்கான பொதுவான தீர்மானம் ( Universal Charter for the Welfare of Children ) எங்கு நிறைவேற்றப்பட்டது ?

(A) பொதுச்சபை ( General Assembly )

(B) பாதுகாப்புச்சபை ( Security Council )

(C) உலக நீதிமன்றம் ( International Court of Justice )

(D) செயலகம் ( Secretariat ).

*விடை :* ______________________

9. சார்க் ( SAARC ) அமைப்பின் தலைமையகம் எங்குள்ளது ?

(A) பாங்காக் ( Bangkok )

(B) காத்மண்டு ( Kathmandu )

(C) கொழும்பு ( Colombo )

(D) டெல்லி ( Delhi ).

*விடை :* ______________________

10. ஜாஸ்கர் மலைப்பகுதி .................... மழைபெறும் பகுதியாகும்.

(A) அதிக

(B) மிக அதிக

(C) குறைந்த

(D) மிகக் குறைந்த.

*விடை :* ______________________

11. கீழ்வரும் பகுதிகளில் எப்பகுதியில் ‘சுந்தரி’ ( ‘Sundari’ ) மரங்கள் காணப்படுகின்றன ?

(A) வெப்பமண்டல இலையுதிர் காடுகள்

(B) படர் தாவரக் காடுகள் ( Mangrove forests )

(C) பாலைவனத் தாவரங்கள்

(D) இமயமலைத் தாவரங்கள்.

*விடை :* ____________________

12. பின்வருவனவற்றுள் எது ஒரு முக்கியமான பெர்ரோ-கலப்பு உலோகம் ( ferro-alloy ) ?

(A) மாங்கனீசு தாது

(B) பாக்சைட் தாது

(C) இரும்பு தாது

(D) மைக்கா.

*விடை :* ____________________

13. 1919 ம் ஆண்டு இரும்பு எஃகுத் தொழிற்சாலை எங்கு நிறுவப்பட்டது ?

(A) பத்ராவதி ( Bhadravathi )

(B) பர்ன்பூர் ( Burnpur )

(C) ரூர்கேலா ( Rourkela )

(D) ஜாம்ஷெட்பூர் ( Jamshedpur ).

*விடை :* ____________________

14. எந்த ஐந்தாண்டு திட்டத்தின் போது பசுமைப் புரட்சியானது ( Green Revolution ) மேற்கொள்ளப்பட்டது ?

(A) முதல் (B) இரண்டாம்

(C) மூன்றாம் (D) நான்காம்.

*விடை :* ______________________________

15. பின்வருவனவற்றுள் எது குடிசைத்தொழிலுக்கு ஓர் எடுத்துக்காட்டு ?

(A) கயிறு திரித்தல் ( Rope making )

(B) ஆடைகள் ( Garments )

(C) சோப் ( Soaps )

(D) வேதிப்பொருட்கள் ( Chemicals ).

*விடை :* ______________________________

II. கோடிட்ட இடங்களை பொருத்தமான விடைகளைக் கொண்டு நிரப்புக : 5 × 1 = 5

16. கவுன்ட் டி லாலி ( Count de Lally ) .................................................. என்ற இடத்தில் ஆங்கிலேயர்களிடம் சரணடைந்தார்.

17. எகிப்திய மன்னர் .................................................. ஆல் அரியணையில் இருந்து அகற்றப்பட்டார்.

18. 1952 ம் ஆண்டு, இந்திய அரசு .................................................. திறந்தது.

19. இந்தியாவிலேயே மிக அதிக பட்ச வெப்பநிலையை பதிவு செய்யும் கங்கா நகர் .................................................. மாநிலத்தில் உள்ளது.

20. நாம் பெட்ரோலியம் மற்றும் அதன் உப பொருட்களை .............................................. லிருந்து இறக்குமதி செய்கிறோம்.

III. 21. **பட்டியல்-அ** வில் உள்ளவற்றை **பட்டியல்-ஆ** வுடன் பொருத்தி சரியான விடையை கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக : 5 × 1 = 5

| **பட்டியல் - அ** | **பட்டியல் - ஆ** |
|---|---|
| (a) கவர்னர் ஜெனரல் என்ற பதவியை வைஸ்ராயாக மாற்றியது | (i) பட்டயச் சட்டம் 1853 |
| (b) ஒரு சட்ட உறுப்பினரை கொண்டது | (ii) விவேகானந்தா |
| (c) ஆங்கிலோ-ஓரியண்டல் பள்ளி | (iii) பட்டயச் சட்டம் 1833 |
| (d) இராமகிருஷ்ண இயக்கம் | (iv) ஜோதிபா பூலே |
| (e) சத்திய சோதக் சமாஜ் | (v) சர் சையது அகமது கான் |
| | (vi) இந்திய அரசுச்சட்டம் 1858 |
| | (vii) இராமகிருஷ்ண பரமஹம்சர் |
| | (viii) இராஜாராம் மோகன் ராய். |

*விடைகள் :*

(a) ____________________

(b) ____________________

(c) ____________________

(d) ____________________

(e) ____________________

IV. கீழ்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் ***ஒரு*** வரியில் விடையளிக்க : 9 × 1 = 9

22. முதல் ஆங்கிலோ-மராத்தா போரின் போது கவர்னர்-ஜெனரலாக இருந்தவர் யார் ?

23. முதல் உலகப் போருக்கான உடனடிக் காரணம் என்ன ?

24. ''மார்ஷல் பிளான்'' என்ற மிகப் பெரிய திட்டத்தை மேற்கொண்டவர் யார் ?

25. உலக வாணிப கழகத்தின் ( World Trade Organisation ) முக்கிய நோக்கம் என்ன ?

26. 1988-ம் ஆண்டு படைக்குறைப்பு உடன்படிக்கையில் ( Disarmament treaty ) கையெழுத்திட்ட நாடுகள் எவை ?

27. வளர்ச்சியடையாத நாடுகளை ( **Underdeveloped countries** ) மூன்றாம் உலக நாடுகள் ( **Third World** ) என அழைத்தவர் யார் ?

28. வனமஹோத்சவாவின் ( **Vanamahotsava** ) முக்கிய நோக்கம் யாது ?

29. இந்தியாவில் உள்ள மிகப்பழமையான மேலும் தற்போதும் உள்ள செய்தித்தாள் எது ?

30. ஏழாவது ஐந்தாண்டு திட்டத்தின் மிக முக்கியக் குறிக்கோள் யாது ?

V. கீழ்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் இரு வரிகளில் விடையளிக்க : $16 \times 2 = 32$

31. நான்காவது ஆங்கிலோ-மைசூர் போரின் விளைவுகள் யாவை ?

32. சர். M. விஸ்வேஸ்வரய்யா ( Sir M. Vishveswarayya ) ஆற்றிய அரும்பணிகளில் ஏதேனும் நான்கினை எழுதுக.

33. இங்கிலாந்தில் ஏற்பட்ட தொழிற்புரட்சி இந்தியத் தொழில்களை எங்ஙனம் பாதித்தது ?

34. இசூரின் மக்கள் ஏன் அவர்களின் கிராமத்தை 'சுதந்திரமானது' என அறிவித்தார்கள் ? அதன் விளைவு என்ன ?

35. கோவா-வின் விடுதலை இயக்கத்தைப் பற்றி ஒரு சிறு குறிப்பு எழுதுக.

36. ஜப்பான் எவ்வாறு நவீனமயமானது ( Modernise ) ?

37. கேம்ப் டேவிட் உடன்படிக்கையில் ( Camp David Agreement ) கையெழுத்திட்ட நாடுகள் எவை ? அதன் விளைவுகள் யாவை ?

38. SC/ST மக்களின் நலன்களை பாதுகாப்பதற்கென உள்ள வழிமுறைகளில் ( Provisions ) ஏதேனும் இரண்டினை குறிப்பிடுக.

39. ஐக்கிய நாடுகள் சபையின் ( U.N.O. ) ஏதேனும் இரண்டு குறிக்கோள்களை குறிப்பிடுக.

40. மேற்குதொடர்ச்சி மலைகள் மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைகளை வேறுபடுத்துக.

41. மனித உரிமைகளுக்கென ஏற்பட்ட நிகழ்வுகளில் இரண்டு மிக முக்கிய நிகழ்வுகளின் ( Two noteworthy events ) பெயரினைத் தருக.

42. முக்கியமான மரபுசாரா ஆற்றல் மூலங்கள் யாவை ?

43. இந்தியாவில் காணப்படும் நான்கு முக்கியமான தொழிற் பிரதேசங்கள் யாவை ?

44. டிரெட்ஜிங் ( **Dredging** ) என்றால் என்ன ? இது எத்துறைமுகத்தில் காணப்படுகிறது ?

45. குடிசைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில்கள் எதிர்நோக்கும் ஏதேனும் நான்கு பிரச்சனைகளைக் குறிப்பிடுக.

46. பொருளாதாரத் திட்டமிடலை ( **Economic planning** ) ஐ வரையறு. அதன் குறிக்கோள்களில் ஏதேனும் இரண்டினைக் கூறுக.

VI. கீழ்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் ***ஆறு*** வரிகளில் விடையளிக்க : 6 × 3 = 18

47. இந்தியாவில் போர்த்துகீசியர்கள் ஏன் அவர்களது அதிகாரத்தை நிலைநிறுத்த முடியவில்லை ?

48. முதல் இந்தியச் சுதந்திரப் போருக்கு இட்டுச் சென்ற அரசியல் காரணங்கள் யாவை ?

49. ஆரம்ப பள்ளிக் கல்வியை அனைவருக்கும் வழங்கும் கொள்கையை அடையும் நோக்கத்தில் நிறைவேற்றப்படும் திட்டங்களின் பெயர்களைத் தருக.

50. இந்தியாவில் நிலத்தை பயன்படுத்துவதில் தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகள் யாவை ?

51. இந்தியாவில் பின்பற்றப்படும் பல்வேறு விவசாய முறைகள் யாவை ? அவற்றை அவர்கள் பின்பற்றுவதற்கான ஏதேனும் இரண்டு காரணங்களைத் தருக.

52. சில்லரை வணிகர்களின் ( Retail traders ) சேவைகள் யாவை ?

VII. கீழ்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் **எட்டு** வரிகளில் விடையளிக்க : 3 × 4 = 12

53. நமது விடுதலை இயக்கத்தில் மகாத்மா காந்தி அவர்கள் ஆற்றிய பங்கு என்ன ?

54. ''யுனெஸ்கோ ( UNESCO ) என்பது ஐ.நா. வின் முக்கிய தனிச்சிறப்பு வாய்ந்த செயலாண்மை கழகங்களுள் ஒன்று.'' ஏன் ?

55. ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தை குழு எவற்றை உள்ளடக்கியது ( consists of ) ? இக்குழுவின் பணிகளைக் குறிப்பிடுக.

VIII. 56. இந்தியாவின் நிலவரைபடத்தை வரைந்து அதில் கீழ்வருவனவற்றை குறிப்பிடுக :

1 + 3 = 4

a) பட்காய் பம் ( Patkai Bum )

b) யமுனா நதி ( River Yamuna )

c) இந்தியாவின் தேயிலைத் துறைமுகம் ( Tea Port of India ).

<u>கண்பார்வையற்ற மாணவர்கட்கான மாற்று வினா :</u> ( வினா எண். 56 க்கு பதிலாக )

இந்திய மக்களின் வாழ்க்கையில் இமயமலை மிக முக்கியமானது ஏன் ? 4